www.padippakam.com

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
## EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை (PLA) 10.2.85 ஞாயிறு பின் இரவு காரைநகர் கடற்படை முகாமை தாக்கியது யாவரும் அறிந்ததே. 100 க்கும் மேலான PLA போராளிகளினால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் ஆரம்பத்தில் தூர இருந்து RPG மூலம் தாக்கிய PLA பின் உள்ளே சென்று தமது இயந்திர துப்பாக்கிகளினால் தாக்கினார்கள். இந்த முகாமில் 600 கடற்படை சிப்பாய்கள் இருந்தாலும் ஆரம்பத்தில் தளத்தை விட்டு வெளியே ஓடினார்கள். அதில் ஒருபகுதி கடற்படையினர் திருப்பித் தாக்கிய போது PLA யின் பலமுனைத் தாக்குதலில் அவர்கள் கொல்லப்பட்டார்கள். இத்தாக்குதலில் 4 பீரங்கிப் படகுகள் கடலினுள் தாழ்த்தப்பட்டதுடன் பல பீரங்கிப் படகுகள் சேதப்படுத்தப்பட்டு சில ட்றக் வண்டிகளும் எரிக்கப்பட்டன. இந்த தாழ்த்தப்பட்ட பீரங்கிப் படகுகள் சீனாவில் செய்யப்பட்ட "சங்காய் II" என்னும் படகுகள் ஆகும். PLA இத் தாக்குதலை மேற்கொள்ளும்போது அதனை ஆக்கிரமிக்கும் நோக்கமின்றி வெறும் தாக்குதலையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஈழப் போராட்டத்தில் முதற் தடவையாக நடாத்தப்பட்ட அரசபடையின் முகாம் தாக்குதல் PLA யின் மட்டக்களப்பு சிறையுடைப்பு, அமெரிக்க அலன் தம்பதிகள் கடத்தல் போன்ற முக்கியம் வாய்ந்த நடவடிக்கைகள் போலவே அமைந்துள்ளது.

* வாழ்க மக்கள் விடுதலைப் படை!

* வெல்க ஈழமக்கள் விடுதலைப் போராட்டம்!

22.2.85

படிப்பகம்

www.padippakam.com

## பீரங்கி கப்பல்கள் நாசம்:

தினத்தந்தி 13·2·'85

# இலங்கை கடற்படை தளம் வீழ்ந்தது

# தமிழ் போராளிகளின் 'ராக்கெட்' தாக்குதல்

கொழும்பு, பிப். 13- ஈழவிடுதலைப் போராளிகள் ஒரே நேரத்தில் பல முனைகளில் இலங்கை ராணுவத்தை எதிர்த்து பயங்கரமாக கிடுக்கித் தாக்குதல் தொடுத்துள்ளனர். இதற்கு ஈடுகொடுக்க இயலாது இலங்கை ராணுவம் திணறுகிறது.

காரைநகர் கடற்படைத் தளத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற அமைப்பு கைப்பற்றி ஐந்து நட்சத்திரம் கொண்ட சிவப்புக் கொடியை ஏற்றியுள்ளனர்.

தமிழ் போராளிகளின் தீவிர தாக்குதலில் இலங்கை பீரங்கிப் படகுகள் பல தூள் தூளாயின. 4 இலங்கை கப்பல்களைக் கைப்பற்றி, அவற்றிலும் தங்கள் கொடிகளை ஏற்றினார்கள்.

பலாலி ராணுவ முகாம் மீதும் குருநகர் ராணுவ முகாம் மீதும் ராக்கெட் மற்றும் நவீன ரகதுப்பாக்கிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இலங்கை ராணுவத்தினர் கொடுமை நாளுக்கு நாள் வளர்ந்து இனியும் பொறுக்க முடியாது என்ற உச்சநிலையை எட்டிவிட்டது.

இதனால் யாழ்ப்பாணம் மன்னார் பகுதியில் உள்ள தமிழர்கள் தங்கள் பெண்கள் பிள்ளைகளுடன் எப்படியாவது தப்பித்தால் போதும் என்று அணி அணியாக தமிழகம் வந்து சேருகிறார்கள்.

ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களின் உணர்ச்சி மிக்க போராட்டத்துக்கு ஈடு கொடுக்க இயலாத நிலை இலங்கை ராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது. நவீன ஆயுதங்களை இன்னும் வாங்கிக் குவிப்பதற்காக அதுலத் முதலி அமெரிக்காவிற்கும், வெளியுறவு அமைச்சர் ஹமீது இங்கிலாந்துக்கும் சென்று திரும்பி உள்ளனர்

சமீபத்தில் போர்ச்சுகலில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு வந்த விமானம் திருவனந்தபுரத்தில் பெட்ரோல் இல்லாததால் இறங்கியது அந்த விமானத்தை பின்னர் பத்திரமாக இந்தியா சமீபத்தில் வழியனுப்பியது இப்படி ராணுவ தளவாடங்களை இலங்கை அரசு வாங்கிக் குவித்த போதிலும் ஈழவிடுதலைப் போராட்டத்தை ஒடுக்க இயலவில்லை.

### கடற்படை தளம் வீழ்ச்சி

யாழ்ப்பாணத்திலிருந்து 30 கி.மீ தூரத்தில் காரைநகர் கடற்படை முகாம் உள்ளது. இந்த கடற்படை முகாமிலிருந்து தான் ரோந்து படகுகளும், ராணுவ கப்பல்களும் செயல்படுகின்றன. தமிழ் மீனவர்களை கடலில் மறித்து தாக்கி கொள்ளையடிக்கும் சிங்கள ராணுவ வீரர்கள் இங்கிருந்து தான் புறப்பட்டு கிளம்புவது வழக்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த கொரில்லா வீரர்கள் காரை நகர் கடற்படை தளத்தின் மீது தாக்குதல் தொடுத்தார்கள்.

கொரில்லா வீரர்களின் தாக்குதலை எதிர்பாராத இலங்கைக் கடற்படை துவக்கத்தில் பின்வாங்கிய போதிலும் பின்னர் உக்கிரமாக வெறித்தனத்தோடு எதிர்த்தது

### 4 மணி நேர சண்டை

நான்கு மணி நேரம் கடுமையான சண்டை நடந்தது. இறுதியில் கடற்படைதளத்தை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வீரர்கள் கைப்பற்றினார்கள்.

இந்த சண்டையில் 150 சிங்கள ராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

காரைநகர் கடற்படைமுகாமில் உள்ள அனைத்துகட்டிடங்களும் நொறுக்கப்பட்டன.

காரைநகர் கடற்படை தளத்தில் நிறுத்தப் பட்டிருந்த பலநவீன பீரங்கிப் படகுகளை தகர்த்து விட்டார்கள் அத்தோடு நான்கு போர்க் கப்பல்களையும் கைப்பற்றினார்கள்.

கடற்படை தளத்தின் மீதும் நான்கு கப்பல்கள் மீதும் ஐந்து நட்சத்திரம் பொறிக்கப்பட்ட ஈழ விடுதலைச் சிவப்புக் கொடியை ஏற்றினார்கள். கடற்படை தளத்தில் வைக்கப் பட்டிருந்த ஏராளமான நவீன ரக ஆயுதங்களையும் கைப்பற்றினார்கள்.

### ராக்கெட் தாக்குதல்

தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்று அவர்களை துப்பாக்கி கட்டைகளால் தாக்கி, அவர்கள்பிடித்த மீன்களை கொள்ளை அடித்து செல்வதற்கு பழி வாங்கவே இந்தத் தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஈழ விடுதலைப் போராளிகள் வசம் உள்ள காரை நகர் கடற்படை தளத்தினை இலங்கை ராணுவம் சுற்றி வளைத்து தாக்கி தங்களிடமிருந்து கைப்பற்றாமல் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காரைநகர் கடற்படை தளத்தை சுற்றி உள்ள பகுதியில் குருநகர், பலாலி என்ற இடங்களில் இலங்கைராணுவ முகாம்கள் உள்ளன.

இந்த முகாம்கள் மீது தொடர்ந்து ராக்கெட் வீசித் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

ஈழ கொரில்லா வீரர்கள் நவீன ரக பீரங்கிகளைப் பயன்படுத்தி குண்டு மழை பொழிந்து வருகிறார்கள்,

இரண்டு முகாம்களிலிருந்து ராணுவத்தினர் லாரி ஜீப் போன்ற வாகனங்களில் வெளியே வராமல் தடுக்க சாலைகளில் குண்டு வீசித் தகர்த்துள்ளனர். இதனால் வாகனங்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஈழ விடுதலைப் போராளிகள் மேற்கொண்டுள்ள இந்த அதிரடித் தாக்குதலை கொழும்புவிலிருந்து வெளியான செய்திகளும் உறுதிப்படுத்தி உள்ளன.

ஈழ விடுதலைப் போராளிகள் கூட்டாக மேற்கொண்டுள்ள இந்தத்தாக்குதலிலிருந்துதப்புவது எப்படி என்று தெரியாமல் இலங்கை ராணுவம் திணறுகிறது.

அதனால் இலங்கை ராணுவத்தை முடுக்கிவிட புதிய அமைப்பு ஒன்றினை ஜெயவர்த்தன அவசரம் அவசரமாக அமைத்துள்ளார்.

### புது ராணுவ அமைப்பு

தனி ஈழம் கோரி ஆயுதப் போராட்டம் நடத்தி வரும் தமிழ்ப் போராளிகளை ஒடுக்குவதற்காக ராணுவ கவுன்சில் ஒன்றை தனது தலைமையில் [illegible]

படிப்பகம்